# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள் 10.06.2026**

**(காணொளி காட்சி விசாரணை)**

**முன்னிலை**

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-19682/A/2022**

திரு.சி.**மூர்த்தி** -- மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர் மற்றும்
**தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,** -- பொது அதிகார அமைப்பு
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**சேலம் மேற்கு வட்டம்,**
**சேலம் மாவட்டம்.**

# ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (10.06.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் / மேல்முறையீட்டாளர் | திரு.சி.**மூர்த்தி ஆஜரானார்** |
| பொது அதிகார அமைப்பு | **திருமதி.கு.பெரியம்மாள்<br>பொதுத்தகவல் அலுவலர் மற்றும்<br>தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், சேலம் மேற்கு வட்டம் அவர்கள் ஆஜரானார்.** |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 01.08.2022 |
| **மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம்**, 2005, **பிரிவு** 6(1)**இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், மெய்யனூர் இட்டேரி ரோட்டில் மாநகராட்சி நுண் உயிரி தயாரிப்பு மையம் இருக்கும் இடத்தின் பழைய மூலபத்திரத்தின் நகல் உட்பட** 3 **இனங்களில் தனக்கு தகவல்கள் வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளார்.** | |
| சட்டப் பிரிவு 6(3)-**ன் கீழ்** மனு **மாற்றம் செய்த** நாள் | ----- |

| | |
|---|---|
| பொது தகவல் அலுவலரின் பதில் | 22.09.2022 |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 06.09.2022 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 06.10.2022 |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 26.11.2022 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் **திருமதி.கு.பெரியம்மாள், பொதுத்தகவல் அலுவலர் மற்றும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், சேலம் மேற்கு வட்டம் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு சி.ப.எண்.**249/2022/**அ**4, 22.09.2022, **சி.ப.எண்.**249/2022/**அ**4, 05.06.2026 **நாளிட்ட கடிதங்களின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலராலும், சி.ப.எண்.**27'8/2022/**அ**2, 06.10.2022 **நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலராலும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்து அவற்றின் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.**

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான **மனுதாரர் தான் தகவல்களை பெற்றக்கொண்டதாகவும், அதில் இனம் 3-க்கான தகவல் முழுமையாக இல்லை என்றும், அதனை பெற்று வழங்குமாறும் காணொளி காட்சி விசாரணையில் தெரிவித்தார்.**

4. **இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்து, ஆணையம் பின்வருமாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-**

- *மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள தகவல்களில் இனம் 3-க்கான தகவலை <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சலக இணையதள ஒப்புகை சீட்டின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 08.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகின்றது.*

ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண். SA-19682/A/2022</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் மற்றும்
**தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**சேலம் மேற்கு வட்டம்.**
**சேலம் மாவட்டம் - 636 005.**

**<u>மனுதாரர்</u>**

திரு.C.**மூர்த்தி,**
**மெய்யனூர் இட்டேரி ரோடு,**
**சேலம் - 636 004.**

Copy to file

KRM/PA 10.06.2026